# முயற்சியாண்மைக்கல்வி

**07**

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## முயற்சியாண்மைக் கலாசாரம்

## தரம் 11

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

**கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

(1) முயற்சியாளருக்கு உரித்தான தனித்தன்மை வாய்ந்த நடத்தைகள், அணுகுமுறைகள், நம்பிக்கைகள், யோசனைகள், பழக்கவழக்கங்கள், விதிமுறைகள் போன்றவற்றின் தொகுப்பு,

1. முயற்சியாளரின் பண்புகள்.
2. வணிக நெறிமுறைகள்.
3. முயற்சியாண்மைக் கலாச்சாரம்.
4. வணிகச் சூழல்.

(2) ஒரு முயற்சியாண்மைக் கலாசாரத்தை உருவாக்குவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணி **அல்லாதது,**

1. வெற்றிகரமான முயற்சியாளரின் முன்மாதிரிகள் சமூகத்தில் அதிகளவில் காணப்படுகின்றன.
2. வளங்கள் தாராளமாக காணப்படுதல்.
3. அரசு மற்றும் ஏனைய நிறுவனங்களை ஊக்கப்படுத்தல்
4. சாதகமற்ற பொருளாதாரச் சூழல் நிலவுதல்.

(3) முயற்சியாளராக இருக்க பெண்களிடம் காணப்படும் பலமாக **கருதப்படாதது**.

1. சிக்கனம்
2. உயர் மட்ட படைப்பாற்றல்
3. மூலதனத்தைப் பெறுவதில் சிரமம்
4. நேரத்தை சிறந்த முறையில் பயன்படுத்தல்

(4) ஒரு வணிகத்தின் கலாசாரம் அந்த வணிகத்தில் ஈடுபட்டுள்ள நபர்களை அடிப்படையாகக் கொண்டது,

1. நிதித் திறனைப் பொறுத்து.
2. மதிப்புகள் மீது.
3. புகழ் மீது.
4. திறமை சார்ந்தது.

(5) வணிகம் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றும் அத்தகைய சமூகப் பொறுப்பில் ஈடுபடும் ஒரு பிரிவினராக கருதப்படாதவர்

1. உரிமையாளர்கள்
2. வாடிக்கையாளர்கள்
3. வணிகம்
4. சமூகம்

(6) ஊழியர்கள் வணிகத்தில் அக்கறை செலுத்துவதற்கான காரணம்,

1. தரமான பொருட்களை நியாயமான விலையில் பெறுதல்.
2. முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தில் போதுமான வருமானம் பெற.
3. நியாயமான ஊதியம் மற்றும் வேலை பாதுகாப்பு.
4. கடனை சரியான நேரத்தில் மீள பெற்றுக்கொள்ள.

(7) பின்வருவனவற்றில் எது முயற்சியாளரை ஊக்குவிக்க அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதி ஊக்குவிப்பு அல்லாதது?

1. வணிகவங்கி கடன் வசதிகள்
2. பிற வங்கிக் கடன் வசதிகள்
3. சந்தை வசதிகள்
4. பரிசுகள் மற்றும் நிதி உதவி

(8) பின்வரும் எந்த கூற்றானது முயற்சியாளர் கலாசாரத்தை சிறப்பாக விபரிக்கின்றது?

1. முயற்சியாளர் கலாசாரம் என்பது சமூகத்தில் முயற்சியாளர் பற்றி கட்டமைக்கப்பட்ட பல்வேறு கருத்துக்கள் பற்றிய விவாதம்.

2. முயற்சியாளர் கலாசாரம் என்பது முயற்சியாளருக்கு உரித்தான பல்வேறு அணுகுமுறைகள், நம்பிக்கைகள், யோசனைகள், நடத்தைகள்.

3. முயற்சியாளர் கலாசாரம் என்பது சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப வணிக வாய்ப்புகளை உருவாக்குவதாகும்.

4. முயற்சியாளர் கலாசாரம் என்பது ஒரு பிரச்சனைக்குத் தீர்வாக சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் புதுமைகளை உருவாக்கும் செயல்முறையாகும்.

(9) ஒரு முயற்சியாளருக்கு நிதிச் சலுகைகளை வழங்கும் உள்ளூர் வணிக வங்கி,

1. தேசிய சேமிப்பு வங்கி (NSB)
2. பிராந்திய அபிவிருத்தி வங்கி
3. மக்கள் வங்கி
4. கூட்டுறவு கிராமிய வங்கி

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

(10) தர அமைப்பு சான்றிதழ், தேசிய தரநிலைகளை உருவாக்குதல், போன்ற நிதி அல்லாத சலுகைகளை வழங்குவது.

1. தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம்.
2. ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்.
3. இலங்கை தர நிர்ணய நிறுவனம்.
4. தொழில் வளர்ச்சி நிறுவனம்.

**பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

(11) வளர்ந்து வரும் நாடாக இலங்கை எதிர்கொள்ளும் நான்கு பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளை குறிப்பிடுக.

(12) முயற்சியாளர் கலாசாரம் தோன்றுவதற்கு இருக்க வேண்டிய நான்கு சாதகமான சமூக மற்றும் பொருளாதார காரணிகளைக் குறிப்பிடவும்.

(13) முயற்சியாளருக்கு எதிரான நான்கு சமூகக் காரணிகளைக் குறிப்பிடவும்.

(14) "தொட்டிலை ஆட்டும் கை உலகை ஆள்கின்றது" என்ற பழமொழியில் கிராமப்புற பெண்களின் நான்கு தனித்துவமான திறன்களை குறிப்பிடவும்.

(15) இலங்கைப் பொருளாதாரத்தில் பெண்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான இரண்டு வாய்ப்புகளை உதாரணத்துடன் விளக்குக.

(16) வணிகம் சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் இரண்டு வழிகளை உதாரணத்துடன் விளக்குக.

(17) வணிகம் சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுவதன் மூலம் பெறக்கூடிய நான்கு நன்மைகளைக் குறிப்பிடவும்.

(18) முயற்சியாளரை ஊக்கப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் இரண்டு நிதி அல்லாத சலுகைகள் மற்றும் அத்தகைய ஊக்கத்தொகைகளை வழங்கும் இரண்டு நிறுவனங்களைக் குறிப்பிடவும்.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH